# ஜி.ஸி.ஈ. (உயர் தர) வகுப்பு பரீட்சைகளில் மாற்றம்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தொலைபேசி: எண்; 49 போன் 220 — தேசிய தினசரி — மலர் 13 இதழ் 210

யாழ்ப்பாணம் ஆவணி 24 றஜப் 18 வியாழக்கிழமை (9-9-71)

## டிசம்பர் சோதனை இல்லை

கொழும்பு, புதன்

கல்வி பொது தராதரப் பத்திர உயர்தர வகுப்பு பரீட்சைகளில் அடுத்த ஆண்டில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

விஞ்ஞான-கலைத் துறையாளர்கள் இந்த மாற்றங்களில் பலன்பெறுவார்கள் என்று தெரிகின்றது.

ஜி. ஸி. ஈ. உயர்தர வகுப்பு பரீட்சைகள் அடுத்த ஆண்டிலிருந்து டிசம்பர் மாதத்திலிருந்து நடைபெற மாட்டாது. ஏப்ரல் மாதத்தில் மாத்திரமே பரீட்சைகள் வைக்கப்படும்.

விஞ்ஞான மாணவர்கள் செய்முறைப் பயிற்சி சோதனையை எதிர்நோக்க வேண்டியுமிருக்காது. கலைப் பகுதி மாணவர்கள் நீண்ட கட்டுரைகள் வரையும்படி கோரப்படமாட்டார்கள். சிறு கட்டுரைகளே எழுத வேண்டியிருக்கும்.

இத்தகவல்களை பரீட்சைப் பகுதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

மீன்பிடி இலாகா டைரக்டர் யாழ்ப்பாணம் வருகிறார். யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள மீன்பிடிப் பயிற்சி நிலையத்துக்கான இடத்தை அவர் பார்வையிடுவார். இவர் இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## அமைச்சர் கொல்வின் விளக்கம்:

# "பயங்கரவாத இயக்கம் ஏன் தோல்வி கண்டது?"

## "நிரபராதிகளை விடுதலை செய்ய வேண்டும்"

— டட்லி

கோட்டை, புதன்

மக்களின் ஆதரவில்லாததாலேயே பயங்கரவாத இயக்கம் ஆரம்பத்திலேயே தோல்வி கண்டது என்று தோட்டத்தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா இன்று ஆட்சி மன்றத்தில் கூறினார்.

பயங்கரவாத நடவடிக்கை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் நிரபராதிகளை விடுதலை செய்யவேண்டுமென்று முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வற்புறுத்தினார்.

இன்று ஆட்சிமன்றத்தில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா இடைக்கால வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

முன்னாள் பிரதமர் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டினார். ஆரம்பக்கட்டத்தில் பயங்கரவாதிகள் தொடர்பாக தகவல் கிடைத்ததும் அவர் தக்க நடவடிக்கைகள் எடு

(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவச்சிப்பாய் கைது மற்றும் மூவர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், வியாழன்

மாதகல் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரையும் அவர் பிரயாணம் செய்துகொண்டிருந்த காரிலிருந்த மைலிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரையும் அந்தக்காரின் சாரதியையும் மாதகல் இராணுவமுகாம் லெப்டினண்ட் நேசர்மன் பெரேரா தொண்டமானாறில் இடைமறித்துக் கைது செய்தார். கைதுசெய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் அவிபார் பாருக்கிடமிருந்ததாகக் கூறப்படும் ஐநூறு ரூபாவையும் கைப்பற்றியதுடன் அவரையும் அவருடனிருந்த மற்றும் மூவரையும் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச்சென்றார்.

(5ம்-பக்கம்பார்க்க)

முன்னைய மேயர் பதவிக்காலத்து

## நியமனங்கள் பற்றி ஆராயக் கமிட்டி நியமனம்

யாழ்ப்பாணம், வியா

முன்னாள் மேயர் திரு சி எஸ் துரைராசா பதவியில் இருந்தகாலத்தில் செய்யப்பட்ட நியமனங்கள் ஒப்பந்தங்கள் போக்குவரத்து செலவினங்கள் உட்பட சிலநடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்து மாநகர சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென மூன்று பேர் கொண்ட கமிட்டி ஒன்று நேற்றுநடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டது. மாநகரசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் தம்பு கந்தையா, கே எஸ் நடராசா கே வி தெய்வேந்திரம் ஆகியோர் இக் கமிட்டியில் அங்கம்வகிக்கின்றனர்.

திரு துரைராசாவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய கமிட்டி நியமிக்கவேண்டுமென்று திரு கே எஸ் நடராசாவினால் கொண்டுவரப்பட்ட இப் பிரேரணை மீது முன்னாள் மேயர் திரு எஸ் நாகராசா திருமதி அந்தோனிப்பா சுவாமிநாதர் திரு என் ரி செல்லத்துரை ஆகியோர் வாக்களிக்காது நடுநிலைமை வகித்தனர். திரு துரைராசா தமக்கெதிரான இப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார்.

நேற்றுமாலை மேயர் திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டமுடிவில் ஜனாப் எம் ஜி பசீர் பேசுகையில் மேயர் திரு துரையப்பா அண்மையில் வெளிநாடு சென்றிருந்தபோது மேயருக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வருவதற்குச் சில அங்கத்தவர்கள் முயற்சி எடுப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தது என்றும் அப்படியான பிரேரணை ஏதும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்றும் கேட்டார். இதற்கு மேயர் பதிலளிக்கையில் 'அப்படி ஒன்றும் இல்லை' என்றார்.

## பருத்தித்துறை கொலை வழக்கு

# கொலை நடந்த நகைக்கடையை கோர்ட்டார் இன்று பார்ப்பர்

யாழ்ப்பாணம், வியா

பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலை வழக்கை விசாரணை செய்துவரும் வடபகுதி அசைஸ் நீதிமன்ற நீதிபதி ஜஸ்ரிஸ் மார் முடிக்குரிய வழக்கறிஞர், எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் ஜூரிகள் ஆகியோர் இன்று காலை கொலை நடந்த இடமான கடையை நேரில் சென்று பார்வையிடவிருக்கின்றனர்

பருத்தித்துறையில் 1968ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கும் 68-ம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்று திகதிக்குமிடையில் முகம்மது சுல்தான் முகிதீன் என்பவரைக் கொலைசெய்ய சுவாமிநாதன் இராமச்சந்திரன், செல்லத்துரை நடராசா ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்ததாகவும் அந்தச் சூழ்ச்சியினால் அவர் கொலை செய்யப்பட்டதாகவும் 68ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி இராமச்சந்திரன் ஒன்பவர் முகமது சுல்தான் முகிதீனை கொலைசெய்ததாகவும் அதே நேரம் அதே இடத்தில் நடராசா முதலாம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்கு உடந்தையாக இருந்தாரென்றும் இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

சென்ற சில தினங்களாக

வட்டுக்கோட்டை

## தேர்தல் ஆட்சேபவழக்கு இன்றுதொடர்ந்து விசாரணை

கோட்டை, புதன்

வட்டுக்கோட்டைத் தொகுதி தேர்தல் ஆட்சேப வழக்கின் அப்பீல் மனு மீதான விசாரணை இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை நாளை காலையும் தொடர்ந்து நடைபெறும்.

மனுதார் சார்பில் ஆஜரான திரு எம் திருச்செல்வம் கியூ ஸி இன்று தொகுப்புரை நிகழ்த்தினார்.

'அரசகரும மொழிச் சட்டத்தின் கீழ் தியாகராசா ஒய்வுபெற இடமில்லை. அவர் ஓய்வுபெற்ற முறை பிழையானது' என்று மனுதார் சார்பில் திரு எம் திருச்செல்வம்கியூ ஸி வாதாடினார்.

பிரதமநீதியரசர் திரு எச் என் ஜி பெர்னாண்டோ நீதியரசர்கள் திரு ஏ எல் சிறிமானே திரு ஜீ ரி சமரவிக்ரம ஆகியோர் முன்னிலையில் இந்த அப்பீல் விசாரணை நடைபெறுகிறது.

ஆட்சிமன்றத்துக்கு திரு ஆ தியாகராசா தெரிவு

(6-ம் பக்கம் பார்க்க)

இவ்வழக்கு விசாரணைசெய்யப்பட்டுவருகிறது. இன்று கோர்ட்டார் கொலை நடந்த இடத்துக்கு நேரில் சென்றுபார்வையிடவிருக்கின்றனர்

## வரிவிளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

காலம் பெறுமதியானது. ஒரு பைக்கட் மிக்கவைத்லவைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்யலாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

## விற்பனைக்கு

25 பரப்பு நன்றாக விளையும் தென்னம், சடையன் பிட்டி விடத்தல்பளை, உசனில் குளத்திற்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு வாங்குபவர் த. கணேசன் திருவடிநிழல், அராலி வடக்கு வட்டுக்கோட்டை, எனும் விலாசத்திற்கு உழுதலுக்கு முன் தொடர்பு கொள்ளவும். 3560

குங்குமம்! கண்ணைக் கவரும் பல கலர்களிலும் அர்ச்சனைக் குங்குமம், மீனாச்சி குங்குமம் முதலிய பல தினுசுகள் பெற்றுக்கொள்ளலாம். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160 செட்டியார் தெரு, கொழும்பு. 3523

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆம்பலவாணர் வீதியில் நாலு அல்லது இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரான்லி ஹவுஸ், 95/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 3558

## தேவை

யாழ்ப்பாண நகரிலுள்ள நெசவுநிலையத்துக்குநெசவுக் கல்லூரியில் பயிற்சிபெற்றுத் தேறிய ஆசிரியை தேவை. ஆங்கில தட்டெழுத்தும் தெரிந்திருந்தால் நல்லது. நெசவுவேலையில் தேர்ச்சியுள்ள பெண்களும் தேவை. நல்ல சம்பளம் (ஆசிரியர்க்கு மட்டும்) ஊழியர் சகாயநிதி. போனஸ் மற்றும் சலுகைகள் உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3539 C/o "ஈழநாடு" யாழ்ப்பாணம். 3539

கைத்தறி நெசவு வேலையில் அநுபவமுள்ள பெண் ஆசிரியை ஒருவர் உடனே தேவை. நெசவு வேலையுடன் கைவேலை அனுபவமும், நெசவுசாலையை நடத்தும் திறமையும் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 14-9-71க்கு முன் அனுப்புதல் வேண்டும். Cytex (Ceylon) 92, Colombogam Road, Jaffna. 3559

## உடுப்பிட்டி
### பல நோக்குக் கூட்டுறவு சங்கம்

மேற்படி சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. 13-9-71க்கு முன்னர் ரூபா 25/- கட்டி கேள்விப்பத்திரத்தைப்பெற்றுக்கொள்ளவும். கேள்விப் பத்திரம் 15-9-71 பகல் 12 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை. 3014

## அறிவித்தல்
### பகிரங்க ஏல விற்பனை

எனது அலுவலகத்தில் பாவனைக்குதவிய மூன்று (3) துவிச்சக்கர வண்டிகள் 15-9-71 மு. ப 10-30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

இவற்றை வாங்க விரும்பும் கூடிய கேள்விக்காரர் உடனடியாகக் கேள்வித் தொகையைச் செலுத்தி துவிச்சக்கரவண்டிகளை அப்புறப்படுத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை எனது அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தேவரத்தினம் டான்போத்;
விசேட ஆணையாளர்,
வவுனியா நகரம்.
2-9-71. 3013

## பண்டத்தரிப்பு பட்டணசபை
### ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி வியாபாரக் குத்தகை விளம்பரம்
### 1971-ம் ஆண்டு

1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம்1-ம் திகதிதொடக்கம் மார்கழி மாதம் 31-ந்திகதி வரையுமுள்ள 3 மாத காலத்திற்கு ஆட்டிறைச்சிக் கடையையும், மாட்டிறைச்சிக் கடையையும்குத்தகையாகக் கொடுப்பதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு அமைய கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் 1971-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ம் திகதி திங்கட்கிழமை வரையும் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் புரட்டாதி மாதம் 22-ம் திகதி புதன்கிழமை மு. ப 10-00 மணிக்குப் பிந்தாமல் அதற்கென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப்பெட்டியில் போடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 10/- கேள்விப் பத்திரம் ரூபா 2/-.

**நிபந்தனைகள்:-**

1. ஆகக் கூடுதலான கேள்வித்தொகை கேட்டவரின் பெயரே சபையால் அங்கீகரிக்கப்படும்
2. கேள்விப்பத்திரத்தில் பொறிக்கப்பட்ட முழுத் தொகையையும் உடனடியாகக் கட்டவேண்டும்
3. இறைச்சியின் விலை சபையால் அறிவிக்கப்படும். விலைப்பட்டியல் தெளிவாக விளம்பரப்பலகையில் எழுதி கடைக்குமுன்னால் தொங்கவிடப்படல் வேண்டும்.
4. அங்கீகரிக்கப்பட்ட வியாபாரி கசாப்புச்சட்ட விதிகளுக்கு அமைய தனது செலவில் ரூபா 500/-க்குக் குறையாத ஒரு பிணையுறுதியை இரு பிணையாளருடன் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். எல்லாக் கேள்விகளையும் காரணம்காட்டாது தலைவருக்கு தள்ளிவிட அதிகாரம் உண்டு.
5. கிழமை நாட்களில் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டபௌர்ணமி தினங்களில் ஆடு, மாடு வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

இ. செல்வரத்தினம்,
தலைவர்,
பட்டினசபை,
பண்டத்தரிப்பு.
பட்டினசபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு
7-9-71. 3012

## கேள்வி விளம்பரம்
### வரணிக் கிராமசபை

வரணிக் கிராமசபைத் தலைவரால் 20-9-71-ந் திகதி காலை 10-30 மணிவரை மகாவித்தியாலய றோட்டு வேலைக்குச் சிக்கனத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் ரூபா 50/- கேள்விப் பிணைப்பணமாகவும், ரூபா 10/- கேள்விப் பத்திரப்பணமாகவும் செலுத்தியதின் பேரில் வழங்கப்படும் பத்திரங்களிலேயே கேள்விகள் கோரப்படல் வேண்டும். கேள்விப் பத்திரப்பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது, கேள்விப் பத்திரங்கள் 18-9-71-ந் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும், மேலதிக விபரங்கள் அந்நேர நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

க. முருகேசு, ஜே. பி.
தலைவர்,
கிராமசபை, வரணி.
கிராமசபை அலுவலகம்,
வரணி, 6-9-71 3010

## கேள்விவிளம்பரம்
### பனங்காமம் கிராமசபை

கீழ்க்காட்டப்படும் வேலைகள் செய்வதற்கு ரூபா 5,000/- மேல் பதிவுசெய்யப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இடமிருந்து 1971-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20-ந்திகதி (20-9-71) காலை 10-00மணி வரைக்கும்கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 10/- கிராமசபைக்கந்தோரில் அலுவலக நேரங்களில் 18-9-71-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரைக்கும் கேள்விப்பத்திரப்பணம் செலுத்தி உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்

கேள்விப்பத்திரத்தின் பிரதி ஒன்று நிறைவேற்றுப் பொறியியலாளர், வவுனிக்குளம் அவர்களுக்கு கி.ச. அக்கிராசனருக்கு கிடைக்கும் அதே நேரத்தில் கிடைக்கக் கூடியதாக இருத்தல்வேண்டும். மேற்கண்ட விபரங்கள் யாவும் பனங்காமம் கிராமசபைஅலுவலகத்திலோ அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளர் வவுனிக்குளம் அலுவலகத்திலோ கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

**வேலைகளின்விபரம்:**

1. பனங்காமம் கி. ச. புதிய அலுவலகக் கட்டிடம்.
2. நட்டான்கண்டல் கிழக்கு றோட்டுக்கு கல்லுப் போட்டுத் தார் ஊற்றுதல்.

இங்ஙனம்,
ஆ. தம்பையா.
கி. ச. தலைவர் ஜே பி.
பனங்காமம்-
நட்டான்கண்டல்.
பனங்காமம்
கி.ச அலுவலகம்,
நட்டான்கண்டல்.
மாங்குளம். 7-9-1971.
3011

## பின்பற்ற யோசனை

மானிப்பாய், புதன் சமூக சேவை அடிப்படையில் இம்மன்றம் கலைகளை வளர்த்து வருவது பாராட்டத்தக்கது. இத்தகைய வழியினை எல்லாக்கலைஞர்களும் கடைப்பிடிக்கவேண்டும் என திரு செ யோ இளையதம்பி நவாலி இளம் கலைஞர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரைநிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

திரு அ மகாலிங்கம் பேசுகையில் சமுதாயத்திற்கு சேவைபுரியும் உயர்ந்த கொள்கைகளை வரையறுத்துக் கடைப் பிடித்துக்கொண்டு இளைஞர் இயக்கங்கள் தமது இலட்சியங்களை அடைவதற்கு தீவிரமாக உழைக்க வேண்டும் எனக்கூறினார்.

திருவாளர்கள் அ செபநாயகம், ஜே அருளம்பலம் ஆகியோரும் உரையாற்றினர். நடன, இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.


ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
இருவர் உள்ளம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-30,பி.ப.2-30,மாலை6-30இரவு10மணி
பின்னணிப் பாடகர்கள்
★ ரி. எம். சௌந்தரராஜன்
★ ஏ. எல். ராகவன்
ராஜ்ஸ்ரீ — விஜயகுமாரி — நாகேஷ்
நடித்த
கல்லும் கனியாகும்

வின்சர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
சங்கமம்

4-வது ஜனத்திரள் வாரம்
வெலிங்டன் (யாழ் நகர்) லிடோ (யாழ் நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி. (காலை 10-30 மட்டும்)
மற்றும்
கெப்பிட்டல்—பிளாசா
திரைகளில்

நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
தினசரி பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30,
திலிப்குமார் - வைஜயந்திமாலா
நடித்த
மதுமதி
(ஹிந்திச் சித்திரம்)

நாகலக்ஸ்சினிமா
கன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
SWEET NIGHTS
தினசரி 6-30, 9-40
சனி, ஞாயிறு 2-30
பாலச்சந்தர்-ரேவதி
நடித்த
கைதி
[புதிய கொப்பி]

மனோகரா
(யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு காலை 10-30
பம்பாயில்
சி. ஐ. டி. 555
(தமிழ்)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Genne Barry
Senta Berger
in
ISTANBUL EXPRESS

தினசரி பி.ப. 2-00, 9-45
ஜெமினி—ஜமுனா
நடித்த
நல்ல தீர்ப்பு

வெல்லிசினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
8—12
எம். ஜி. ஆர். - பத்மினி
ராணி சம்யுக்தா
13—
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊட்டிவரை
உறவு

# பூட்டோவுக்கும் ஷேக்கின் கதி ஏற்படுமா?

## மேற்குப் பாகிஸ்தானிலும் அரசியல் நெருக்கடிக்கு அறிகுறி

லாகூர், செப். 8

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினரால் உருவாக்கப்படும் எந்த ஓர் அரசியல் சாசனத்தையும் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஏற்றுக் கொள்ளாதென அதன் தலைவர் சுல்பிகார் அலிபூட்டோ ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு அறிவுறுத்தியிருப்பதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த மார்ச் மாதம் நடந்த பொதுத் தேர்தலின் பின் நடந்த சம்பவங்களை அடுத்து இராணுவ ஆட்சிபிரகடனப்படுத்தப்பட்டதும் அவாமி லீக் தடை செய்யப்பட்டதும், அதன் தலைவர் ஷேக்முஜிபுர் ரஹ்மான் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. இதன் பின் பாகிஸ்தானுக்கான அரசியல் சாசனத்தை தாமே உருவாக்கப் போவதாக ஜனாதிபதி யாஹ்யாகான் அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் தேர்தலில் மேற்குப் பாகிஸ்தானில் பெரும்பான்மை பலமும் பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் இரண்டாவது பெரும்பான்மை பலமும் கொண்டுள்ள மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலிபூட்டோ ஜனாதிபதியுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்துள்ளார். அவை பெரும்பாலும் வெற்றி அளிக்கவில்லை என்று தெரிகிறது.

### பூட்டோவுக்கும் ஷேக் கதியா

ஜனாதிபதி யாஹ்யாகான் மேற்குப்பாகிஸ்தானில் வெற்றி பெற்ற மக்கள் கட்சியிடம் கூட அதிகாரத்தை கையளிக்க மாட்டார் என்றும் திரு பூட்டோவை ஷேக் முஜிபுர் போலவே சிறையில் அடைக்கக் கூடுமெனவும் அலோஸியேட் பிரஸ் லாகூரிலிருந்து அனுப்பிய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் நடக்குமானால் கிழக்குப் பாகிஸ்தானைப் போலவே மேற்குப் பாகிஸ்தானிலும் போராட்டம் நடக்குமென ஜனாதிபதி யாஹ்யாகானை மக்கள் கட்சி எச்சரித்திருப்பதாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

### யாஹ்யா-பூட்டோ ஆலோசனை

ஜனாதிபதி யாஹ்யாகானுடன் இறுதிச் சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடத்த பூட்டோதன் ஆலோசகர்களுடன் விரைவில் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாக். வெளிநாட்டமைச்சரின் மாஸ்கோ விஜயம் தோல்வி?

புதுடில்லி, செப். 8

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் திரு சுல்தான் முகமதுகான் தனது பிரயாணத் திட்டத்தை சுருக்கிக்கொண்டு நாடு திரும்பியுள்ளார். இவர் சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின்பே தன் விஜயத்தை இடைநடுவில் முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார், எனத் தெரிகிறது. கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினையில் பாகிஸ்தான் நடந்து கொண்டமுறை சரியானதெனவும், இந்தியாவின் தலையீடு தவறானது என்றும் நிரூபிக்க முடியாமற் போனதே இதற்கு காரணமாக இருக்கலாமென அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

### சோவியத் வற்புறுத்து

கிழக்குப்பாகிஸ்தானில் மார்ச்மாதம் நடைபெற்ற தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சியை ஒப்படைப்பதே அங்கு அரசியல் தீர்வு காண்பதற்குள்ள ஒரே வழி என மாஸ்கோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் நெருக்கடி தோன்றியதும், அங்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சோவியத் தலைவர்கள் விடுத்த வேண்டுகோள்கள் ஜனாதிபதி யாஹ்யாகானால் நிராகரிக்கப்பட்டன. இந்தியாவும் சோவியத் யூனியனும் அண்மையில் பரஸ்பரம் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டதை அடுத்து பாகிஸ்தானுக்கும் சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு குரோமிக்கோவை விஜயம் செய்யுமாறு பாகிஸ்தான் விடுத்த அழைப்பை திரு குரோமிக்கோ ஏற்றுக்கொள்ளவில்லை. இதன்பின்பே திரு. கான் மாஸ்கோவுக்கு விஜயம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## “பிற்போக்கு சக்திகள் தடைபோடுகின்றன”

உடுப்பிட்டி, புதன்

“இன்றைய அரசாங்கம் உண்மையான சோஷலிஷப் பாதைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. இதனைவிரும்பாதபிற்போக்குச் சக்திகள் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்குத் தடைபோட முயல்கின்றன. ஏழைமக்களாகிய நாங்கள் அரசாங்கத்தை வலிமை பெறச் செய்வதற்கு எங்கள் பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும்.”

இவ்வாறு கரணவாய் தெற்கு, மண்டான்குடியேற்றவாசிகள் சனசமூக நிலைய 3-வது ஆண்டுவிழாவில் பேசுகையில் சமாதான நீதவான் திரு. ஆ. குலேந்திரம் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த ஆசிரியர் திரு க. செல்லத்துரை ஒவ்வொருவரிடமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், பொறுமையும் இருந்தால் இத்தகைய நிலையங்கள் முன்னேற்ற மடையுமென்று கூறினார். மற்றும் திருவாளர்கள் க. இராசரத்தினம், க. நடராசா, க. கந்தசாமி, இ. கோபால் (கிச உறுப்பினர்) டாக்டர் கே.வி பாலகிருஷ்ணன் ஆகியோரும் பேசினர்.

‘பெரியமனிதன்’ இறைவா னின் என்னும் இரு நாடகங்களும் இடம்பெற்றன.

### இளம்பிள்ளை வாதம்

பருத்தித்துறை, புதன்

புத்தூர் பகுதியில் மூன்று குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாத நோய் காணப்பட்டிருப்பதாகத் தெரிகிறது இவர்கள் மூவரும் சிகிச்சைக்காக உடனடியாக யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### ஜாதிக குரு சங்க உடுவில் கிளை

மானிப்பாய், புதன்

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத்தின் உடுவில் கிளையினது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 11ந் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆனைக்கோட்டை சாலை சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது.

இ. பாக். பிரச்னையை

## வகுப்புவாத சக்திகள் தங்களுக்கு பயன்படுத்தப்பார்க்கின்றனவாம்

### பிரதமர் இந்திரா எச்சரிக்கை

ஸ்ரீநகர், செப். 8

நாட்டிலுள்ள வகுப்புவாத சக்திகள் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதனால் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளையக் கூடும்.

இவ்வாறு ஜம்முகாஷ்மீரில் இருநாள் சுற்றுப்பயணஞ்செய்துவிட்டு புதுடில்லி திரும்புவதற்குமுன் உதம்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில் மக்களின் மனதில் ஐயத்தை ஏற்படுத்தி தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற இவர்கள் முயலுகிறார்கள். இதற்காக உண்மையைத் திரித்து கூறுவதோடு மக்களைத் தவறான வழியிலும் இட்டுச் செல்லுகிறார்கள். இவர்கள் விஷயத்தில் மக்கள் கவனமாக இருக்கவேண்டும் என்றார்.

இதற்கு முன்பாக திருமதி காந்தி வேறோர் கூட்டத்தில் உரையாற்றுகையில் நாட்டில் வறுமையை ஒழிக்க மக்கள் முன்வரவேண்டும். இப்பொழுது மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியுள்ளதை காணக்கூடியதாக இருக்கிறது. வறுமை என்ற கொடியநோயைப் படைத்தவன் தந்தானென்று இப்பொழுது யாரும் எண்ணுவதில்லை. மக்களுக்கு முன்னெப்பொழுதையும் விட இப்பொழுது வாய்ப்புக்கள் அதிகமுண்டு இந்திய அரசியல் சாசனம் எல்லா மக்களுக்கும் சமவாய்ப்பு அளித்திருந்த போதிலும், எல்லோரும் அதனை அனுபவிக்கமுடியவில்லை எனவே, எல்லா மக்களும் ஏழ்மை அகன்று சுபீட்சத்துடன் வாழ்வதற்கான திட்டங்களை அரசாங்கம் எடுத்து வருகிறது. இந்தத்திட்டங்களை சரியான முறையில் நடைமுறைப் படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

### இளைஞர்கள் நினைத்தால்...

உடுப்பிட்டி புதன்

“இளைஞர்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம். இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கிராமத்துக்காகப் பாடுபடுவதோடு நாட்டு நன்மைக்காகவும் பாடுபட வேண்டும். இவ்வாறு கரம்பகம் இளைஞர் முன்னேற்றக்கழக ஆண்டுகூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு பொன்னையா இராசரத்தினம் குறிப்பிட்டார்.

பின்வருவோர் கழகத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்- திரு பொ இராசரத்தினம், தலைவர் திரு இ தியாகராசா, உபதலைவர்: திரு செ நடராசா செயலாளர்- திரு க நாகராசா, உபசெயலாளர் திரு இ தம்பையா, தனாதிகாரி- திரு க பொன்னுத்துரை, உபதனாதிகாரி திரு ஜீவரத்தினம் 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

### அமெரிக்கா செல்கிறார்

பருத்தித்துறை, புதன்

இலங்கை மத்திய வங்கிப் பொருளாதாரத்துறையைச் சேர்ந்த திரு எம் குலசிங்கம் பொருளியல் பட்டம் பெறுவதற்காக அமெரிக்காவிலுள்ள அயோவா பல்கலைக்கழகம் செல்கிறார்.

இவர் அரவெட்டியைச் சேர்ந்த திரு முருகேசு தம்பதிகளின் புதல்வராவர்.

## வட அயர்லாந்துப் பிரச்னையில் நிரந்தரத் தீர்வுகாண முயற்சி

லண்டன், செப். 8

வட அயர்லாந்து நெருக்கடிக்கு நிரந்தரத்தீர்வொன்றைக்காணும்முகமாக பிரிட்டிஷ் உள்நாட்டமைச்சர் திரு ரெஜினல்ட் மோட்லிங் வட அயர்லாந்துத் தலைவர்களுடனும், மற்றும் கட்சித் தலைவர்கள் சமயத்தலைவர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார் இதுபற்றி அவர் தெரிவிக்கையில், வடஅயர்லாந்தில் நிரந்தர அமைதி ஏற்படுத்துவதற்கான பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்’ அங்கு நடைபெறும் ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்படவேண்டும் என்றார்.

திரு மோட்லிங்கின் ஆலோசனைகளை வடஅயர்லாந்துத் தலைவர்கள் நிராகரித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும் அவர் தனது பேச்சுவார்த்தைகள் பயனளிக்குமென நம்பிக்கையுடன் இருப்பதாகத் தெரிகிறது

சில நாட்களுக்கு முன் பிரிட்டிஷ் பிரதமர் திரு எட்வார்ட் ஹீத்துடன் ஐரிஷ் பிரதமர் லண்டனில் இரு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இப்பொழுது உள்நாட்டமைச்சர் திரு மோட்லிங் வட அயர்லாந்துக்கு விஜயம் செய்கிறார்.

இதே நேரத்தில் ஐரிஷ்குடியரசின் இராணுவத் தளபதி தொடர்ந்தும் அமெரிக்காவில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் வட அயர்லாந்தில் என்ன நடக்கிறதென்பதை அமெரிக்க மக்களுக்கு விளக்கப்போவதாகத் தெரிவித்த போதிலும் இவர் முன்பு கிரிமினல் குற்றம் செய்திருப்பதால் அவரை அனுமதிக்க முடியாதென அமெரிக்கராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 24-ம் திகதி
(9-9-71)

மேஷம்: ஏக்கத்தில் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். எதிலும் நிதானம் வேண்டும்.

ரிஷபம்: பூமியால் இலாபம் உண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் உண்டு. உடல்நலம் பாதிக்கப்படும்.

மிதுனம்: அறவழியை நாடுவீர்கள். தெய்வ சிந்தை மேனோக்கி நிற்கும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

கடகம்: நல்லதைச் செய்வீர்கள் நலன்பெறும் பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பும் உயரும்.

சிம்மம்: புத்திர பாதை வழிதிறக்கும். புத்திர சுகமும் உண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்தில் இனிமை தங்கும்.

கன்னி: வானம்பாடிபோல் கானம் இசைப்பீர். வாழ்வில் ஒளிவீசும் முதியவர் ஒருவர் உமக்கு நல்ல வழி காட்டுவார். முன்னேற்றமான தினம்.

துலாம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாசை இன்று நிறைவேறும்.

விருச்சிகம்: ஏமாற்றம் தாக்கும். எதிலும் தயக்க நிலை தென்படும். செய்தொழில் மூலம் நஷ்டம் ஏற்படலாம். செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

தனுசு: பாக்கியவிருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும். தக்க சமயத்தில் உதவுவதற்கு தந்தை முன்வருவார்.

மகரம்: கடமையாற்றும் இடத்தில் மற்றவர்களின் மதிப்பைப்பெறுவீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம்.

கும்பம்: பண விவகாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. புத்திரர்களாலும் புகழுக்கிடமுண்டு. வீட்டில் சுபகாரியம் இடம்பெறலாம்.

மீனம்: ஆடம்பரமான செலவுகள் இன்று தவிர்த்துக்கொள்ளவும். பூமிப் பிணக்கு இன்று பொல்லாங்கைத் தேடித்தரலாம்.

சோதிடகலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நிதி ஒதுக்கீடு

அரியாலை, புதன்

கல்வி அமைச்சு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையைத் திருத்தியமைப்பதற்கென 1800 ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

## 3 ரூ. அபினுக்கு ரூ. 1600 அபராதம்

யாழ்ப்பாணம், வியா

வல்வெட்டித்துறையில் உள்ள ஒரு வீடொன்றைத் திடீர் சோதனையிட்ட யாழ்ப்பாணம் சுங்க இலாகாவைச் சேர்ந்த திரு என். ஜெஜெகராசா கோஷ்டியினர் வீட்டுப் பின்புறத்தில் வைக்கோலின் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 ரூத்தல் அபினைக் கண்டுபிடித்து வீட்டுச்சொந்தக்காரரை சுங்கக் கலெக்டர் முன் ஆஜர் செய்தனர். கலெக்டர் 1600 ரூபா அபராதம் விதித்து அபினைப் பறிமுதல் செய்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 9—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

249 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

இரவு 6-15 ஓடிவிளையாடு பாப்பா 6-35 நாட்டுப் பாடல்கள் 7-00 தமிழ்மூலம் சிங்களம் 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைப்பயிற்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

## பாராட்டு

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் கடந்த சில ஆண்டுகளாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றி [illegible]ந்தர நிலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்ற ஆசிரியர் திரு இ. கந்தையாவைப் பாராட்டி அண்மையில் விழா ஒன்று நடைபெற்றது. பண்டிதர் திரு ச. குமரேசையா, ஆசிரியர் திரு சிவசுப்பிரமணியம், பண்டிதர் திரு பொ. சுப்பிரமணியம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். ஆசிரியர் திரு கந்தையா தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி கூறினார்.

## ஆண்டுவிழா கொண்டாடுவர்

யாழ்ப்பாணம், வியா.

வட்டுக்கோட்டை கிழக்கு தன்னைத்தை சர்வோதய சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டுவிழா இம்மாதம் 11-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. முதல்வர் செ. சின்னத்தம்பி தலைமையில் நிகழும் இவ்விழாவில் நியமன எம். பி. திரு எம். வி. சுப்பிரமணியம், யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு என். ரி. செல்லத்துரை, கி. ச. தலைவர் திரு. ச. நிற்சிங்கம் உட்பட பலர் உரையாற்றுவர்.

மதுரகவி இ. நாகராஜன் தலைமையில் நிகழும் கவியரங்கில் கவிஞர்கள்: வித்துவான், [illegible] செ. சுந்தரம்பிள்ளை, வே. ஐயாத்துரை, கவிஞர் வே. குமாரசாமி ஆகியோர் கலந்து கொள்வர்.

காங்கேசன்துறை திரு வி. வைரமுத்து, திரு கே. உருத்திராபதி ஆகியோரின் இசைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

## தமிழாசிரியர் நியமனம்

மாத்தளை, புதன்

கதிர்காமம் வித்தியாலயத்தில் தமிழாசிரியர் மேலும் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளார். இதுவரை காலமும் ஒரேஒரு தமிழ் ஆசிரியரே பல வகுப்புகளை நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

லாலாசோப்

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வியா

அச்சுவேலி லாலாசோப் ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெறும் 'மின்னொளி' கரபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் 2-1 ஆட்டங்களால் அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. அ. வேலும்மயிலும் மத்தியஸ்தம் வகித்தார்.

முதல் போட்டியில் வல்வை உதயசூரியன் கழகம் போட்டியிட வராததால் நீர்வேலி விளையாட்டுக் கழகம் விளையாடாமல் வெற்றியைத் தட்டிக் கொண்டது.

### இன்றைய ஆட்டம்

முதல் ஆட்டம், அச்சுவேலி கலாஜோதி விளையாட்டுக் கழகமும், தொண்டமானாறு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும்; 2-வது போட்டியில் புத்தூர் இரத்தினம்ஸ் விளையாட்டுக் கழகமும், திருப்பிட்டி அண்ணா விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டியும் மோதுகின்றன. (தே நி)

## பாரதிவிழா

மானிப்பாய், புதன்

மறுமலர்ச்சி மன்றம் மானிப்பாயில் 11-ம் திகதி மாலை பாரதி விழாவினைக் கொண்டாடுகிறது. திரு வெ. செல்வரத்தினத்தின் தலைமையில் இவ்விழா நடைபெறவிருக்கிறது.

## கோரிக்கை

அரியாலை, புதன்

வேலையற்று இருக்கும் வயதில் குறைந்த ஆண்பெண் இருபாலார்க்கும் வேலைவாய்ப்பளித்தல், மின்சார வசதி, குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் சம்பந்தமாக கொழும்புத்துறை மேற்குப் பகுதிக்கு அரசாங்கம் இங்குள்ள ஸ்ரீ ல. க. கட்சிக்கிளை மூலமே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறப்படும் தீர்மானம் கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ. ல. க. கட்சிக்கிளைக் கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்டது. திரு க. கந்தசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## தக்காளி பயிரிடுவோர் கவலை

சுன்னாகம், புதன்

கோடைப்போகத் தக்காளிச் செய்கையில் வடபகுதி விவசாயிகள் ஆர்வம்கொண்டுள்ள இவ்வேளையில் காய்களை ஒருவிதபுழு தாக்க ஆரம்பித்துள்ளது. இதனால் தக்காளிச் செடிகள் பிஞ்சுகள் காய்களுடன் கருகிவருகின்றன. இதற்குப்பலதரப்பட்ட மருந்துகள் தெளிக்கப்பட்டும் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரின் ஆலோசனைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொண்டும் எதுவித பயனும்கிட்டவில்லை. யாழ். விவசாயிகள் தாங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாகப் புகார் தெரிவித்துள்ளனர்.


வெள்ளை ஆடைகளை
எவ்வளவுதான் கழுவினாலும்
பரிபூரண வெண்மையை
அடையமுடியாது.
உங்களுக்குத் தேவையானது
றொபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனால் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றொபின் நீலம் தேவை.

றொபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனால் முடிவில் றொபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப்
பிரகாசிக்க றொபின் நீலம் பாவியுங்கள்.

ஓர் றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

## பருத்தித்துறை கொலை வழக்கு:

# "கொள்ளை அடித்தால்தான் வாழ்க்கையில் முன்னேறலாம்"

### 2-ம் எதிரி கூறியதாக செல்வராசா சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா. "கொள்ளையடித்தால்தான் வாழ்க்கையில் முன்னேறலாம் என 2ம் எதிரி நடராசா என்னிடம் கூறினார். நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. கொள்ளையடிக்கத் திட்டம் போட்டிருப்பதாகவும், அதைப்பற்றி பின்னர் சொல்வதாகவும் 2ம் எதிரி கூறினார்"

பருத்தித்துறை கொலை வழக்கில் சாட்சியமளித்த பொன்னையா செல்வராசா மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடபகுதி அஸைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ எல் டி கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவருகிறது.

செல்வராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: 2ம் எதிரியை கொஞ்சகாலமாக எனக்குத் தெரியும். நான் விவசாயப்படையில் இருந்தபோது 2ம் எதிரியும் விவசாயப்படையில் இருந்தார். காக்கா கொலைச் சம்பவம் ஞாபகமிருக்கிறது. பருத்தித்துறைக்குப் போகவேண்டுமென்றும் 1-ம் எதிரி வருவார் என்றும் 2ம் எதிரி கூறினார். முதலில் நான் மறுத்தேன் மறுநாள் நானும் போகச் சம்மதித்தேன் ராமச்சந்திரன் ஆளைக் கட்டிப்போட்டு வருவார் என்றும், நாங்கள் வெளியில் நிற்கவேண்டுமென்றும் அவர் கூறினார்

கத்தியை எனக்குத் தெரியும் அது பல விஷயங்களுக்குப் பாவிப்பதுண்டு. 1-ம் எதிரி கத்தியை வைத்திருந்தார். 2-ம் எதிரிதான் 1ம் எதிரியிடம் கத்தியைக்கொடுத்தார் இவன் வந்தால் பயந்து ஓடிவிடுவான், இவனை விட்டுட்டு போவம் என்று 1ம் எதிரி 2ம் எதிரிக்குச் சொன்னார், அவரை விட்டுட்டுப்போகக் கூடாதென 2ம் எதிரி சொன்னார், நான் போக 2ம் எதிரி கட்டாயப்படுத்தி கூட்டிச்சென்றார். கடற்கரைக்கு வந்தோம். பின் சிறிஸ்கபேக்கு போனோம், பின் அங்கிருந்து வெளியில் வந்து சந்தைக்குப் பக்கத்தில் நின்றோம். 1-ம் எதிரி எங்களை நிற்கச்சொல்லிவிட்டு ஆளைப்பார்க்கப்போனார், அவர் திரும்பிவந்து ஆளைக் காணவில்லை என்றார். நாங்கள் தேநீர் குடித்தோம். 1ம் எதிரி காசு தந்தார் காக்கா காசு தந்ததாக அவர் கூறினார்

காக்காகடை மேல்மாடிக் கதவை 1ம் எதிரி திறந்தார் பல்கணிக்குவந்து சைகை காட்டிவிட்டு உள்ளே சென்றார் நாங்கள் மதகடியில் அப்போது நின்றோம் மீண்டும் பல்கணிக்கு வந்தார். ஆளை முடித்து விட்டேன். உங்களுக்கு வாருகிறோ என்றார் கீழே வந்து கதவைத் திறந்துவிட்டார்- 2ம் எதிரியைக் கூப்பிட்டார் அவர் போகத் தெண்டித்தார் நான் தடுத்துவிட்டேன் பயத்தால் அவரைவிடவில்லை- 1ம் எதிரி மீண்டும் வரச்சொல்லிக் கூப்பிட்டார் 2ம் எதிரி படியில் காலைவைத்தார் நான் அவரை வரும்படி கூறினேன், 1ம் எதிரியையும் வரும்படி கூறினேன். 1ம் எதிரி மறைந்துவிட்டார்"

நாங்கள் காத்திருந்தோம் 15 நிமிடம் காத்திருந்தோம் 2ம் எதிரி சயிக்கிள் கொண்டு வந்தார். 1ம் எதிரியும் சயிக்கிள் கொண்டுவந்தார். 3 பேர் 2 சயிக்கிளில் வந்தோம்!

1ம் எதிரி மீண்டும் பல்கணிக்குவந்து எங்களைக் கூப்பிட்டார். 2ம் எதிரி வீட்டிற்கு போவோம்வா என்று கூப்பிட்டார். 1ம் எதிரி வரவில்லை உள்ளேபோய் விட்டார் நானும் 2ம் எதிரியும் சயிக்கிளில் நெல்லியடிக்கு வந்தோம். 1ம் எதிரியின் கடைக்குப் போனோம். 2ம் எதிரி தனது சயிக்கிளில் வீட்டிற்குப் போய்விட்டார் நான் 1ம் எதிரியின் சயிக்கிளில் வந்து கடையில் காத்திருந்தேன்.

1ம் எதிரி அதிகாலை 3மணிக்குவந்தார் அவர் ஒரு பார்சல் கொண்டுவந்தார். அந்தப் பார்சலைத் திறந்தார்- அதற்குள் துணிகள் இருந்தன. அவரின் தலைமயிரில் இரத்தம் இருந்தது. உடலிலும் இரத்தமிருந்தது. பெனியனும் சாரமும் அணிந்திருந்தார். அப்போதுவேறுசாரம் கட்டியிருந்தார். பின்னேரம் அவர் வெள்ளை சேட்டும் கலர் சாரமும் அணிந்திருந்தார்.

சாரம்எங்கே? என்றேன். சாரத்தில் இரத்தம் பட்டுவிட்டதாகவும் காக்காவின் சாரத்தை கட்டி வந்ததாகவும் கூறினார். தன் சாரத்தையும் கொண்டுவந்தார். பார்சலில் 7 அல்லது 8 தாலிக்கொடிகள், 5 அல்லது 6 சங்கிலிகள், 10 அல்லது 15 ஜிப்சிகளும் இருந்தன! நகைகளைக் கொண்டு ஒரு கடை போடப்போவதாகக் கூறினார். எனக்குத் தரும்படி கேட்கவில்லை. பயத்தால் காலையில் வருவதாக கூறிவிட்டுச்சென்றேன்.

நடராசா வாக்குறுதி அளித்திருந்தார். பங்கு தருவதாக ஒப்பந்தம். நான் பயத்தால் பங்கு கேட்கவில்லை. மறுநாள் காலை கடைக்கு வந்தேன் அந்த நேரம் முதலாம் எதிரி நகைகளை உருக்கிக்கொண்டிருந்தார் இரகசிய பொலிசாரிடம் வாக்குமூலமளித்தேன். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## "வல்லிபுரத்தில் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்குக"

பருத்தித்துறை, புதன் "கண்ணாடி வகைகள், பாவனைக்கு கலப்பற்ற கண்ணாடி ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு தேவையான கண்ணாடி மணல் வல்லிபுரத்தைச் சேர்ந்த மணற்குன்றுத் தொடர்களில் காணப்படுகிறது. இம்மணற்குன்றுகள் பருத்தித்துறை அம்பன் வீதியின் வடகிழக்காக ஏறக்குறைய முக்கால் மைல் தூரத்தில் உள்ளன"

இவ்வாறு பருத்தித்துறையை அடுத்த வல்லிபுரப் பகுதியில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை நிறுவுவதன் அவசியம் பற்றி கைத்தொழிற்துறை அமைச்சருக்கும், விஞ்ஞான ஆராய்ச்சி அபிவிருத்திக் கழகத்திற்கும் அனுப்பியுள்ள மகஜரொன்றில் லங்கா சமசமாஜக் கட்சி பிரமுகரான திரு த. கன்காதரன் குறிப்பிட்டுள்ளார்

### கொழும்பு புறக்கோட்டையில்

# 12 லட்சம் ரூபாய் இந்திய கள்ளநோட்டு

கோட்டை, புதன் புறக்கோட்டை செட்டித் தெருவில் சுமார் 12 லட்சம் ரூபாய் பெறுமதியான இந்திய கள்ளநோட்டுக்களைப் பற்றியும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

பெரும் வெளிச் செலாவணி மோசடிகள் சம்பந்தமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெற்று வரும் புலன்விசாரணைகளின் பயனாக இந்தக் கள்ள நோட்டுகள் பிடிபட்டிருப்பதாகத் தெரிகின்றது என்றாலும் இதுபற்றி எதுவித தகவலும் வெளியிடுவதற்கு துப்பறியும் பொலிசார் மறுத்துவிடுகிறார்கள்.

புலன்விசாரணைகள் தொடர்கின்றன என்று பொதுவாகத் தெரிவிப்பதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளியிடுகிறார்களில்லை.

கள்ளநோட்டுகள், உளவு பார்த்தல் போன்ற சர்வதேச மோசடிகள் பற்றி மூன்று வாரங்களுக்கு முன்பிருந்து கொழும்பு, லண்டன், சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய இடங்களில் துப்பறியும் பொலிசார் புலன்விசாரணைகளை நடத்தி வருகிறார்கள். 'புக்கி'களையும் இலங்கையில் இரவு கிளப்புகளையும் சேர்ந்த மூன்று முக்கிய புள்ளிகளின் பெயராவது இதில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

இப்பொழுது மேற்படி விஷயமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களில் வழக்கறிஞர்கள் பலர் இருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

### வண்ணை பெருமாள் உற்சவம்

யாழ்ப்பாணம், வியா வண்ணை வெங்கடேச வரதராசப்பெருமாள் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று 29-ம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்த உற்சவமும் மறுதினமான அக்டோபர் 1-ம் திகதி திருக்கல்யாண விழாவும் நடைபெறும்.

### பாரதியின் மகள் காலமானார்

பம்பாய், செப். புரட்சிக்கவி பாரதியின் மூத்தமகளான தங்கம்மா பாரதி பம்பாயில் காலமானார் இவருக்கு வயது 65. இவர் இருமுறை இலங்கைக்கு வந்துள்ளார்.

சினிமா விமர்சனம்

## கல்லும் கனியாகும்

தமிழ்த் திரையுலகில் இரு பெரும் பின்னணிப் பாடகர்கள் கூட்டாக எடுத்துள்ள சிறந்த தமிழ்ப்படம் ஒன்று இப்பொழுது யாழ்ப்பாணம் ராஜா படமாளிகையில் ஓடிக்கொண்டிருக்கின்றது.

பாடுவதில் மாத்திரமல்ல நடிப்பதிலும் நாங்கள் வல்லவர்கள்தான் என்று இருவரும் நிரூபிக்கின்றனர்.

ரி எம் சௌந்தரராஜனையும், ஏ எல் ராகவனையும் பின்னணியிலேயே கேட்டு வந்த ரசிகர்கள் அவர்களை நேரிலே பார்த்து கேட்கும் சந்தர்ப்பத்தை இப்படம் ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

ஏழை 'வாசு'வாக வரும் ரி எம் சௌந்தரராஜன் அந்தப் பாத்திரத்துடன் ஒன்றிவிடுகிறார். இடைவேளைக்குப் பின் அவரது நடிப்பும் பாட்டும் பிரமாதமாக சோபிக்கின்றன. மியூசிக் டைரக்டராகவரும் ஏ எல் ராகவன் சக்கை போடு போடுகிறார். ஜம்மென்று மாப்பிள்ளை போல் தோன்றும் அவர் சிறப்பாக நடிக்கவும் செய்கிறார்.

விஜயகுமாரி சிறிதுநேரமே வந்தாலும் பிரமாதமாக நடிக்கிறார். எம் என் ராஜத்தை வெகுகாலத்துக்குப் பின் பார்க்கிறோம். கண்ணியமான பாத்திரத்தைக் கச்சிதமாக செய்துமுடித்துள்ளார் ராஜஸ்ரீயின் கவர்ச்சிநடனம் கடற்கரையில் சல்லாபம் எல்லாம் ரசிகர்களுக்கு விருந்துதான். போதாக்குறைக்கு நாகேஷ், சச்சு ஜோடியின் நகைச்சுவை. பார்த்து மகிழ வேண்டியபடம் கல்லும் கனியாகும்.

—'சே'

## யு. என். பி. செனட்டர்கள் வெளிநடப்பு

கொழும்பு, புதன் ஐக்கியதேசியக் கட்சி செனட்டர்கள் நேற்று முன்தினம் செனட்சபையிலிருந்து வெளிநடப்புச்செய்தார்கள்.

செனட் ஒழிப்பு மசோதா அடுத்தநாள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற அரசாங்க தரப்பில் வாக்குறுதி அளிக்கப்படாததை ஆட்சேபித்து அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இந்த மசோதாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமென்று அரசாங்கம் சென்ற கடவை வாக்குறுதியளித்தது. ஆனால் இந்தமுறை ஒழுங்குப் பத்திரத்தில் கடைசி விஷயமாகசேர்க்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித்தலைவர் செனட்டர் பேர்லி விஜயமான்ன கூறினார். அப்படியான வாக்குறுதியெதுவும்கொடுக்கப்படவில்லையென்று அமைச்சர் குமாரசூரியர் தெரிவித்தார்; அரசாங்கம் அளிக்கும் வாக்குறுதிகள் காப்பாற்றப்படாத சபையில் இருப்பதில் பயனில்லையென்றுகூறி திரு விஜயமான்ன வெளியேறினார். யு என் பி செனட்டர்கள் வராததால் சபையில் கோரம் இருக்கவில்லை. செனட்டர் திருச்செல்வம் மாத்திரம் எதிர்க்கட்சியில் இருந்தார். (சி பி ஓ

## இராணுவச் சிப்பாய்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இராணுவச் சிப்பாய் அலியார் பாரூக் இப்போது காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் இராணுவப் பாதுகாப்புடன் இருக்கிறார். தாம் தாக்கப்பட்டதாகப் பொலிசில் அவர் புகார் செய்திருப்பதாகத் தெரிகிறது

காயமிருந்ததாகக் கருதப்படும் ஆர் ஐயக்கொடி, எஸ் சிவசோதி ஆகியோரும் கார்ச்சாரதி சி குருநாதபிள்ளையும் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஆனந்தகுமாரசுவாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர் இவர்கள் மூவரும் இம்மாதம் 10-ந்திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்

முன்னர் நடைபெற்ற இரண்டு கள்ளக்கடத்தல் முயற்சி சம்பந்தமாக இராணுவத்தினருக்குத் தகவல் கொடுத்தவர்கள் பற்றிய விபரங்களை அந்த இராணுவ சிப்பாய் மூலம் அறியும் பொருட்டு குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய்க்கு சிலர் லஞ்சம் கொடுத்துவிட்டு காரில் சென்றுகொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே லெப்டினன்ட் நோர்மன் பெரேரா மோட்டார் காரை மறித்து சிப்பாயையும் அவருடன் வந்தவர்களையும் கைதுசெய்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

கள்ளக்கடத்தல் பற்றித் தகவல் கொடுத்தவர்களைக் கடத்திச்சென்று கெடுதி செய்யச் சதிசெய்ததாகவும் லஞ்சம் கொடுத்ததாகவும் லஞ்சம் வாங்கியதாகவும் இதற்கு உடந்தையாக இருந்ததாகவும் இவர்கள் மீது குற்றம்சாட்டி வழக்குத் தொடரப்படவிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிசாரும் இராணுவத்தினரும் இதுசம்பந்தமாகத் தொடர்ந்து புலன்விசாரணைசெய்துவருகின்றனர்.

## 'தனியார் மரக்காலைகளைமூடி நஷ்டத்தைச் சமாளிக்கலாம்'

மாவிட்டபுரம், புதன் "வடக்கில் இயங்கும் தனியார் மரக்காலைகளை மூடினால்தான் மரக்கூட்டுஸ்தாபனத்தின் கிளைகளாக விளங்கும் மரக்காலைகளின் நஷ்டத்தை நிவர்த்திசெய்யலாம்"

இவ்வாறு யாழ் குடாநாட்டு அரசினர் மரக்காலை அதிகாரிகள் மரக்கூட்டுஸ்தாபனத் தலைவரிடம் வற்புறுத்தினார்கள்.

வடபகுதியில் இயங்கும் மரக்கூட்டுஸ்தாபன டிப்போக்களின் அபிவிருத்தி பற்றி ஆராயவடபகுதிக்கு விஜயம் செய்த மரக்கூட்டுஸ்தாபன அதிபர் திரு ஐவர்பலிபன்ன யாழ் மரக்கூட்டுஸ்தாபன மத்திய டிப்போவில் நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டார்.

அரசாங்க டிப்போவின் கீழ் இயங்கிவந்த மரக்காலைகளை மரக்கூட்டுஸ்தாபனத்திடம் ஒப்படைத்த பின்தான் அரசாங்க டிப்போக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், மரக்கூட்டுஸ்தாபனம் தனியார்களுக்கும் விறகு வழங்குவதால் அரசாங்க டிப்போக்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்று மரக்காலைகளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மணிவாக்கு

அரைகுறை அறிவே நாத்திகம் பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமய உணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்.

—பேக்கன்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 24-ந் திகதி (9-9-71)


## இலங்கையின் வர்த்தகம்

இலங்கையின் உற்பத்திப் பொருள்களின் விற்பனையை இந்தியாவிலும் பிறநாடுகளிலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவிருப்பது பற்றி மகிழ்ச்சியடைய நியாயமுண்டு. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பு ஏற்பட வேண்டுமென்ற இந்தியப் பிரதமரின் யோசனையை இலங்கைப் பிரதமர் மகிழ்ச்சியோடு வரவேற்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

கடந்த பல ஆண்டுகளாகவே நமது நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்து வந்திருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட பயங்கரவாத இயக்கமும் அதை அடக்குவதற்கு ஏற்பட்ட பெரும் செலவும் பொருளாதாரத்தை அவல நிலைக்குக் கொண்டு வந்துவிட்டிருக்கிறது. இப்பற்றாக்குறையைச் சமாளிப்பதற்குப் பெருந்தொகைப் பணம் நாட்டுக்குத் தேவைப்படுகிறது. பிரிட்டனுக்கு அடுத்தபடியாக இலங்கையுடன் பெரிய அளவில் வர்த்தக உறவு வைத்துள்ள நாடு கம்யூனிஸ்ட் சீனாவாகும். இலங்கையும் சீனாவும் செய்துகொண்ட அரிசி-றப்பர் ஒப்பந்தத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். இலங்கையுடன் வர்த்தகம் செய்து கொண்டிருக்கும் மூன்றாவது பெரிய நாடு இந்தியாதான். ஆனால் அது தனது உற்பத்திப் பொருள்களை நமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறது. ஆனால் அவற்றுக்குப் பதிலாக இங்கிருந்து எதையும் கொள்வனவு செய்வதில்லை.

இலங்கையின் நெருக்கடியையும் கஷ்டத்தையும் உணர்ந்த பீக்கிங், சென்ற மே மாதத்தில் பதினைந்து கோடிரூபாவை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்துதவியது. இதற்குமுன் சீனா கொடுத்த இருபத்தைந்து கோடி ரூபாய் இதில் சேரவில்லை.

கைத்தொழிலில் வெளியார் மூலதனமிடுவதை இன்றைய அரசாங்கம் எதிர்க்கவில்லை. ஆனால் இத்துறைகள் உள்நாட்டு மூலப்பொருள்களைப் பயன்படுத்த வேண்டுமென்பதையும் உற்பத்திப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியவையாக இருக்க வேண்டுமென்பதையும் அரசாங்கம் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. கடந்த சில வருடங்களில் கைத்தொழில் துறையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் இந்தப் புதிய துறைகள் பலவும் தங்கள் உற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருள்களுக்கும் கலவைப் பொருள்களுக்கும் பெரும்பாலும் இறக்குமதியிலேயே தங்கியிருக்கின்றன.

அடுத்த ஆண்டிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் புனரமைப்பதில் புதிய ஐந்தாண்டுத் திட்டமொன்றை உருவாக்குவதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தேயிலை, றப்பர், தெங்குப் பொருள், அரிசி ஆகியவற்றின் விவசாய உற்பத்தியிலுள்ள கவனத்தை திசைதிருப்பி உள்நாட்டு மூலப்பொருள்களைக் கொண்டு சிறிய அளவில் கைத்தொழில் உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது இத்திட்டத்தின் ஒரு நோக்கமாகும். கடற்றொழிலை நவீன முறையில் விருத்திசெய்யவும் கரையோரப்பகுதிகளில் எண்ணெய்ப் படிவங்கள்பற்றி ஆராயவும் சோவியத் யூனியனுடன் புதிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கல்வித்துறையைச் சீரமைக்கவும் சமூகசேவைகளில் மாற்றம் செய்யவும் பெரும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய கல்வியை பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் அளிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. முன்னைய அரசாங்கம் குறைத்திருந்த பங்கீட்டு அரிசியை இந்த அரசாங்கம் மீண்டும் வழங்கிவிருப்பதால் இந்த நடப்பு ஆண்டில் அரசாங்கத்துக்கு அறுபத்திரொரு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் மேலதிக செலவாகிறது. அரசாங்கம் துணிச்சலுடன் பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. அதே துணிவுடன் உணவுப் பங்கீட்டுச் செலவையும் குறைக்க முன்வரக்கூடும். ஆண்டுதோறும் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் தீவிரமான நிலச் சீர்திருத்தம் கொண்டுவரவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. என்றாலும் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய காரியம் நாட்டின் வர்த்தகத்தைச் சமப்படுத்துவதேயாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நிதிநிலைமை இப்பொழுது பறவாய் இல்லை

—டாக்டர் பெரேரா

கொழும்பு, புதன்
அரசாங்கம் பதவிக்குவந்த சமயத்தைவிட இப்பொழுது நாட்டின் நிதிநிலைமை மிக நன்றாய் இருக்கிறதென நிதியமைச்சர் டாக்டர் பெரேரா நேற்றுமுன்தினம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தில் பயங்கரவாத நடவடிக்கைகள் ஏற்பட்டபோதிலும் நிதிநிலைமை நன்றாய்த்தான் இருக்கிறது என்றார் அவர். வெளிச்செலாவணி நிலைமை கூட சீர்திருந்தியிருக்கிறது என்றார். இருந்தபோதிலும் இன்னும் நாடு முற்றாக மீட்சி பெற்றுவிடவில்லை. பொருளாதாரம் உறுதி பெறுவதற்கு இன்னும் கடுமையான உழைப்பும் தியாகங்களும் தேவை. பயங்கரவாத இயக்கம் நிதி மதிப்பீட்டில் பெரும் செலவை ஏற்படுத்தியது. 40 கோடியிலிருந்து 400 கோடி ரூபாய் வரை செலவு ஏற்பட்டது. அதன் மூலம் நிதி நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. எனக் கூறிய நிதி அமைச்சர் பெரிய அளவில் வட்டியில்லா கடன்கள் வழங்கி நிதி நிலையைச் சமாளிக்க உதவும் சில மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

## இன்று

கிளிநொச்சி, வியா
கிளிநொச்சி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் இன்று அச்சுவேலி சாண்டியன் கலைக்குழுவினரின் வள்ளி திருமணம் என்ற வில்லுப்பாட்டும் திருமதி சரஸ்வதி பாக்கியராசாவின் பாட்டுக் கச்சேரியும் கலாலயா குழுவினரின் மெல்லிசையும் செல்வி செ அபிராமிதேவா செ சரஸ்வதி மனோகரா ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும் நிகழும்.

......

## பயங்கர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
த்து முளையிலேயே கிள்ளி எறியாதிருந்து விட்டாரென்றும் டாக்டர் கொல்வின் கூறினார்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டதை எவரும் மறந்துவிடமுடியாது ஜனநாயகத்தை அவர் உரிய நேரத்தில் காப்பாற்றினார் என்றார்

### டட்லி

திரு. டட்லி சேனநாயகா பேசுகையில், 1970-ம் ஆண்டு மே மாதத்தில் கூட்டணி அரசு பதவி ஏற்று ஏற்றபத்து மாதத்துக்கு பின்னரே பயங்கரவாத நடவடிக்கை பகிரங்கமாகத் தலைதூக்கியது இந்தப் பத்து மாத கால இடைவேளைக்குள் எடுக்கவேண்டிய தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கலாமே! ரோகண விஜயவீரா எனது ஆட்சிக் காலத்தில் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார் கூட்டணி அரசு பதவியேற்ற காலத்துக்குள் எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கையை எடுத்திருக்கலாம். எத்தனையோ நிரபராதிகள் கைதாகி காவலில் உள்ளனர் இவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்'' என்றார்

## வட்டுக்கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டது செல்லுபடியாகாதெனத் தீர்ப்பு வழங்கும்படி கோரி முன்னர் தாக்கல்செய்யப்பட்ட மனுவை தேர்தல் நீதிமன்றம் தள்ளுபடிசெய்திருந்ததை ஆட்சேபித்து இந்த அப்பீல் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

## குறைந்த விலையில் பேரீச்சம்பழம்

கோட்டை, புதன்
சிறு பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட பேரீச்சம் பழங்களை மிகவும் குறைந்த விலையில் [illegible] விற்பனைசெய்ய கூ. மொ. வி இலாகா திட்டமிட்டுள்ளது. விற்பனவு அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்த வான்கள் மூலம் இதனை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# பிள்ளையையும் என்னையும் ரயில்முன் தள்ளினார் கணவர்

## குழந்தை கொலைவழக்கில் மனைவி சாட்சியம்

கோட்டை, புதன்
தனது மனைவியையும் நான்கு குழந்தையையும் ஓடும் ரயில்முன் தள்ளிவிழுத்தினாராம் எச். பி. சிறிபால என்ற இளைஞன்: குழந்தை ஸ்தலத்திலேயே மரணமானது. காயத்துடன் உயிர் தப்பிய தாயைக் கத்தியால் குத்திக் கொல்ல முயன்றாராம் அவர். ஆனாலும் அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். இச் சம்பவம் வத்தளைக்கு அண்மையில் 1969ம் ஆண்டு நடந்தது.

குழந்தையைக் கொலை செய்ததாகவும் தாயைக் கொல்ல முயன்றதாகவும் சிறிபால மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. பி. வக்கம்பையா முன்னிலையில் விசாரிக்கப்பட்டபோது எதிரியின் மனைவி சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

1969ம் ஆண்டு ஜூலை 24-ம் திகதி எனது கணவன் என்னையும் பிள்ளைகளையும் தமது நண்பரது வீட்டில் பணம்பெற்று வருவதற்காக தம்முடன் வரும்படி சொன்னார், நாம் அன்று மாலை வண்டி மூலம் வத்தளைக்குப் புறப்பட்டுச் சென்றோம்.

கணவர் இளைய குழந்தையுடனும் நான் மூத்த பிள்ளையுடனும் சென்றோம், இரவு சுமார் 8 மணிக்கு [illegible] புகையிரதநிலையத்திற்கு அண்மையில் எமக்கு முன்னால் புகையிரதம் வருவதைக் கண்டு கணவனிடம் மறுபாதைக்கு மாறும்படி சொன்னேன் அவர் கொழும்பிலிருந்து கடுகதிப் புகையிரதம் வருவதாகக் கூறினார். சிறிது நேரத்தின்பின் புகையிரதம் எமக்கு அருகே செல்லும் போது என்னையும் மூத்த புதல்வனையும் தண்டவாளத்தின்மீது கணவர் தள்ளினார் இதையடுத்து என்னைக் கத்தியால் குத்தினார். மகனை உதைத்து தரையில் தள்ளினார்.

மண்டைஓட்டில் ஏற்பட்ட முறிவினாலும் அதிர்ச்சியினாலும் குழந்தைக்கு மரணம் சம்பவித்ததாக முன்னர் நடந்த மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சிறிபால மருதானையிலுள்ள ஸ்ரமோர்ட் கல்லூரியில் நிதிநிர்வாகியாக இருந்து வேலையை இழந்தவர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

......

## வாசுதேவாவுக்கு மூன்று மாதம் விடுமுறை

கொழும்பு, புதன்
கிரியெல்ல எம். பி. திரு வாசுதேவ நாணயக்காராவுக்கு மேலும் மூன்று மாத விடுமுறை வழங்குவதற்கான பிரேரணையை மக்கள் பிரதிநிதிகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது

......

## இன்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், வியாழன்
சேப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர் திரு சு. இந்திரராசா எழுதிய 'கதாபாத்திரங்களின் குணப்பண்புகள்' எனும் நூல் வெளியீட்டுவிழா இன்று வியாழன் பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கல்லூரியின் சமூகக் கலை மன்றம் இதனை வெளியிடுகிறது. எஸ். லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிகள் வகுப்பு உப-தலைவர் டாக்டர் ஜே. பி. செல்லையா நூலை வெளியிட்டுவைத்து உரையாற்றுவார். கல்லூரி அதிபர் ஜி. மு. கார்த்திகேசன் மதிப்புரை வழங்குவார்.

திருவாளர்கள் குழந்தைவேலு, இரா சிவசந்திரன், ஆ. சிவனேசச்செல்வன், வித்துவான் க. கணபதிப்பிள்ளை, பண்டிதர் இரா சிவசுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவர். முதற் பிரதியை திரு ஏ. வி. செல்வராசா பெறுவார்.

## விவசாயத்துக்கு 27,500 ரூபா செலவிடப்படும்

ஊரதீவு, புதன்
புங்குடுதீவு கிழக்கு விவசாயிகள் விவசாயச் செய்கையைப் பெருக்குமுகமாக புங்குடுதீவு கிழக்கிலுள்ள பெரிய கிராயக்குளம் ஆழமாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது.

இந்த முன்னேற்ற வேலையைச் செய்யவிருக்கும் புங்குடுதீவுக் கிராம அபிவிருத்திச்சபை இதற்கென இருபத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபாவைச் செலவிடவிருக்கிறது.

## ஒருமுகப்படுத்த வேண்டும்

அரியாலை, புதன்
உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையை அரசாங்க எழுதுவினைஞர் சேவையோடு ஒருமுகப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு பரமநாதன். பொது விவகார உள்நாட்டு உள்ளூராட்சிமன்ற அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## பெற்றோர் விழா

யாழ்ப்பாணம், வியா
நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலய பெற்றோர் தினவிழாவை முன்னைய வருடங்களிலும் பார்க்கச் சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.